- மிகக் கடினமான மாற்று: மாணவர்கள் தாங்களாகவே விடுபட்ட சொற்களை கண்டுபிடித்து இடைவெளிகளை நிரப்ப வேண்டும். இங்குகூட, பொருள் முன்னரே கற்றிருக்கவேண்டும் என்பது முன்தேவையாகும் (எழுத்துமொழியிலும் ஒலியமைப்பிலும் உள்ள சொற்கூறுகளும் உள்ளடங்கின). எச்சொற்கூறுகள் இடைவெளிகளில் உட்புகுத்த வேண்டுமென்பது தெளிவாயிருப்பின் இவ்வணுகுமுறை கற்றல் மதிப்பீட்டுக்கு ஏற்றதாகும் (எ-டு. தேசிய வரலாற்றுச் சொற்கூறுகள்). ஏனைய வழக்காறுகளில் பல்வேறு விடைகளுக்கு வாய்ப்புண்டு அவை கலந்துரையாடப்படலாம் (எ-டு. "திண்ணன் புதருக்குள்ளிருந்து __________, அவன் மிகவும் அச்சமடைந்திருந்தான்". விடைகள்: விரைந்தான், ஓடினான், ஒளித்துவந்தான்...).

- மாற்று "கவிதைகள் / இயைபுச் சொற்கள்": இடைவெளிகளை இயைபுபெற்ற சொற்களால் நிரப்பல். மாணவர் திறமை மட்டத்தினையொட்டி கடின நிலையினை மேலும் கூட்டலாம். எடுத்துக்காட்டு (கீழ் நிலைகளுக்கு): "அந்த வீட்டு பிள்ளை / ஒரு __________ பாடியது."

- இடைவெளி நிரப்புப் பயிற்சிகள் மொழியைக் கண்டறியும் சிறப்பான கவர்ச்சியான செயற்பாடுகளை நிறைவடையைச் செய்யும். அவ்வேளையில் இலக்கண அடிப்படையில் இன்றியமையாத கூறுகளாகிய வேற்றுமை உருபுகள், அல்லது எண் அடைகள் விடுபட்டிருப்பின் அவை இடைவெளிகளில் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டு: "தேனவன் ஒரு __________ யைக் கண்டான்" "நான் __________ உடைய அம்மாவுக்கு ஒரு முத்தம் கொடுக்கப்போகிறேன்." இப் பயிற்சிக்கு, ஒரு வினையின் அடிநிலை வடிவத்தினை அடைப்புக்குறிக்குள் கொடுக்கலாம், அது சரியான வடிவத்துக்கு மாற்றியமைக்கப்படவேண்டும்: "பூவிழி தாயகம் சென்றாள். அங்கு தன் உறவினரை __________ (காண்)". விளைவுகள் மாணவர்களின் முதல்மொழியில் அவர்களுக்குள்ள திறன் பற்றிய மதிப்புள்ள தகவல்களை வழங்குகின்றது.

---

## 2. மாற்றுச் சொல் தேர்வுகளுடன் செயற்படுதல்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
உருவாக்கப்பட்ட பயிற்சிகள்
(வலம் பார்க்கவும்)

மாற்றுச் சொல் தேர்வுகளில் சில சொற்களுக்கு நிகரான வேறு சொற்கள் (அடிக்கடி ஒருபொருட்சொற்கள்) அமைக்கவேண்டும். இது செயற்படு சொற்களஞ்சிய விரிவாக்கத்தை வழங்கும் – அதன்படி எல்லா மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவர். சொற்கள் மீட்டுரைப்பதுடன் பயிற்சியும் மேற்கொள்ளப்படும்.

மாற்றுகள்: (சிக்கலைப் பொறுத்து, கீழ் மற்றும் உயர் நிலைகளுக்குப் பொருத்தமாக).

- ஆசிரியர் அட்டவணையுள்ள ஒரு தாளினை வழங்குகிறார், அதன் மேற்பகுதியில் ஒரு வாக்கியம், எடுத்துக்காட்டாக, "இன்று பெரிதும் பனி பொழிகின்றது" அல்லது "என் அம்மா பெரும்பாலும் நீலக் கண்ணாடிக் குவளையில் தண்ணீர் குடிப்பாள்" என்பது அமைந்திருக்கும். அதில் ஒவ்வொரு சொல்லுக்கு அல்லது வாக்கியத்துக்கு ஒரு பத்தி இருக்கின்றது. அட்டவணையின் அடுத்த பத்தியில் மாணவர்கள் அதேமாதிரி வாக்கியங்களை அல்லது வாக்கியப் பகுதிகளை (அல்லது எதிரான) பின்வருமாறு எழுதவேண்டும்: "நேற்று சிறிது மழை பெய்தது", "உன் அக்கா சிவப்புக் கண்ணாடிக் குவளையில்தான் தண்ணீர் குடிப்பாள்".

- ஆசிரியர் ஒரு சிறிய எழுத்துருவை வழங்குகிறார் (½ பக்கம்; பரந்த கிடைநிலை) பின்வரும் அறிவுறுத்தல்களுடன்: "கீழ்க்கோடிடப்பட்ட எல்லாச் சொற்களுக்கும் (அல்லது எல்லா பெயர்களுக்கும், வினைகளுக்கும், அடைகளுக்கும்) ஏறத்தாழ அதே கருத்துள்ள சொற்களைப் பதிலிடுக."

- மேலுள்ளதுபோல், ஆனால் எல்லாச் சொற்களுக்கும் அவற்றின் எதிர்ப்பதங்களைப் பதிலிடுக என்னும் அறிவுறுத்தல்களுடன், (எடுத்துக்காட்டு: "சிறிய நாய் → பெரிய பூனை", "அவன் காட்டுக்குள் ஓடினான் → அவள் சதுப்பு நிலத்தில் ஊர்ந்துசென்றாள்"). ஒரு பொழுதுபோக்கு நீட்டிப்பு, இணையர்களாகச் செயற்படுதலுக்கு ஏற்றது, "எதிர் எழுத்துருக்கள்" எழுதுதல் அதாவது, ஒரு கதை அல்லது செய்திப் பத்திரிகைக் கட்டுரை முழுவதையும் எதிர்க்கருத்தில் மீள எழுதுதல்.

- மேலுள்ளதுபோல், ஆனால் இலக்கணம் சார்ந்தது: "எல்லாப் பெயர்களையும் ஒருமையிலிருந்து பன்மைக்கு மாற்றி வினைகளை இயைபுபடச் செய்க!", "எல்லா வினைகளையும் நிகழ்விலிருந்து இறப்புக்கு மாற்றுக" "அடைகளைச் சிறப்பு அடைகளாக மாற்றுக (நல்லது → மிகநல்லது), முதலியன.

- நடையியல் கற்பித்தல்: மாணவர்கள் ஓர் எழுத்துருவைப் பெறுகின்றனர் (ஆசிரியரால் ஆக்கப்பட்டது), அது ஒரே சொற்களைப் பலதடவை திரும்பக்கூறல்களையும் மற்றும் பிழைகளையும் கொண்டுள்ளது (எ-டு. ஒவ்வொரு வாக்கியமும் "அதன் பின்னர்" என்று தொடங்குகிறது, பொதுச் சொற்களாகிய "போ", "செய்" பெருந்தொகையாக உள்ளன. மாணவர்கள் இணையர்களாக எழுத்துருவை அணுகி, மேம்படுத்தப்பட்ட எழுத்துருக்கள் ஒப்பிடப்படுகின்றன.
- மாற்றுச் சொல் பயிற்சியின் மிக விரிவாக்கப்பட்ட வடிவமானது ஒரு கதையை அல்லது எழுத்துருவை தரமான மீள் எடுத்துரைத்தல் ஆகும். இப் பயிற்சியில், மாணவர்கள் மூலத்தை 1 – 3 மணித்துளிகள் கேட்டபின்னர் ஓர் எழுத்துருவை (கதை, உண்மையான எழுத்துரு, கிளைக்கதை, சிறிய பெண்கடவுட்கதை) தமக்கேயுரிய சொற்களில் மீளச் சொல்லுதல். இதனுடைய ஒருவகைச் செயற்கைத் தன்மையால், இவ்வடிவம் ஒரு பயிற்சி என்ற முறையில் பெரிதும் கவர்ச்சியானதல்ல, ஆனால் சொற்களஞ்சியத்தைக் கட்டியெழுப்ப பெரிதும் நன்மை பயப்பதாகும். தொடர்பாடல் மற்றும் ஊக்குவிக்கும் மாற்றுகள்: ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒரு சிறிய எழுத்துருவை (அதாவது, ஒரு செய்தித்தாள் கட்டுரை) பெறுகின்றான்/பெறுகின்றாள். அவர்கள் அதை இரண்டு தடவை வாசித்து, பின்னர் கருத்தைத் தமக்கேயுரிய சொற்களில் மீட்டுரைக்கின்றனர். மூலக் கட்டுரைகள் எண்ணிடப்பட்டு வகுப்பறையின் வலது பக்கத்தில் காட்சிப்படுத்தப்படும். மீள் எடுத்துரைப்புச் செய்யப்பட்ட பதிப்புகள் எழுத்துக்களுடைய (அ, ஆ…) சிட்டைகளுடன் இடது பக்கத்தில் தொங்கவிடப்படும். மாணவர்கள் மீள எடுத்துரைப்புச் செய்யப்பட்ட எழுத்துருக்களைப் படித்து மூல எழுத்துருக்களுடன் பொருத்திப்பார்ப்பர். அவர்கள் விடப்பட்டவைகள் அல்லது பிழையாக மீள் எடுத்துரைக்கப்பட்டவை பற்றிக் குறிப்புகள் எடுப்பர். ஒரு குழுக் கலந்துரையாடலுடன் பயிற்சி நிறைவுறும்.
- # 16.3 யும் பார்க்கவும்: இணை எழுத்துருக்கள்/பிறப்பாக்க எழுத்து.

---

## 3. வேறு பரிந்துரைகள்

- விளையாட்டு சொற்களஞ்சியத்தை கட்டியெழுப்ப, பார்க்கவும் மேலே # 6.3 இல் அ, ஆ, இ – கதைகள் (எடுத்துக்காட்டு: அணில் ஆலமரத்திலிருந்து இறங்கியது. ஈ எறும்பை ஏற்றியது).

| நகரம் | தொழில் | வினை | விலங்கு | அடை | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| வவுனியா | வணிகம் | வரைதல் | வரிக்குதிரை | வடிவான | 5 |
| கனோபர் | கற்பித்தல் | கட்டு | கழுதை | கரிய | 5 |
| பேர்ண் | பேராசிரியர் | பேசு | – | பேர் | 4 |

- தரமான "புவியியல் விளையாட்டு" க்கும் அதுவே பயன்படும். அதில் விளையாடுபவர்கள் நெடுங்கணக்கின் ஒவ்வொரு எழுத்துக்கும், நகரம், நாடு, ஆறு, என்பனவற்றை எழுதவேண்டும் (விதிகள்: எல்லா விளையாட்டாளர்களும் தலைப்புகளுடனான, எ-டு. நகரம், நாடு முதலியன, ஒரு விளக்கப் படத்தினைப் பெறுவர். ஒரு மாணவன்/மாணவி நெடுங்கணக்கு எழுத்துக்களை உரத்து சொல்வான்/சொல்வாள். இன்னொரு மாணவன்/மாணவி நிறுத்து" என உரத்து கூறுவர், உடனே அவ்வாறு தேர்ந்தெடுத்த எழுத்துடன் தொடங்கும் ஒரு சொல் தேர்வுசெய்யப்படுகிறது. விளக்கப்படங்கள் திருத்தியமைக்கலாம், கட்டாயமாக, ஒரு பெயர், வினை, அடை, ஓர் உணர்வு ஆகியன உள்ளடக்கப்படவேண்டும்.

III